# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவராண்டு 2013
ஆனி 23
றமழான் 5
புதன் (7-7-1982)
நிறுவியது 1947
புத்தகம் 36
இதழ் 8
☎ 8164
விலை ரூபா 1.00


# தமிழீழக் கரந்துறை அரசு உருவாக்க வைகுந்தவாசன் முன்மொழிவு






## அமிர் ஆதரவோடு நிறைவேற்ற முயற்சி

"இடைக்காலத் தமிழீழ அரசைக் கரந்துறை அரசாக அமைக்கவேண்டும் என உலகத்தமிழீழ மாநாடு கோருகிறது"— இத்தீர்மானத்தை நியூயோர்க், நனுவெட்டில் நடைபெற்ற உலகத்தமிழீழமாநாட்டில்கொண்டு வரவிருப்பதாக இலண்

—4-ம் பக்கம் பார்க்க




குணசேனு பத்திரிகா சமாசத்தின் 'ரிவிரச' பத்திரிகை வாரந்தோறும் நடத்தும் இனிய வசனப்போட்டிப் பகுதியில் 1982 மே மாதம் 30ந் திகதி ஞாயிற்றுக் கிழமை பத்திரிகை அதன் 11ஆம் பக்கத்தில் இனிய வசனப்போட்டி என்ற தலைப்பில் இக் கார்டூன் சித்திரத்தைப் பிரசுரித்துள்ளது. இக் கார்டூன் சித்திரத்திற்கு பொருத்தமான இனிய வசனத்தை தமது மனதில் வரும் சுதந்திரமானகருத்தைக் கொண்டு எழுதுவதாகும்.

தெரிந்தெடுக்கப்படுகின்ற இனிமையான வசனத்திற்கு பரிசு ரூபா 500/- பின் தெரிந்தெடுக்கப்படுகின்ற இனிமையான வசனம் இரண்டிற்கு 50/-ரூபா கொண்ட ஆறுதல் பரிசுகள் இரண்டு வழங்கப்படுவதாக பிரசுரித்துள்ளது.

இன்றைய தமிழீழ அரசியல் நிலையை விளக்குவதாக அமைந்த இப்படம் என்ன பேசுகிறது? தமிழீழ விடுதலை நாடும் கருத்தைச் சுதந்திரன் வாசகர் ஒருவர்எழுதி அனுப்பியுள்ளார். அவருக்குப் பரிசு கிடைக்குமா?

## சர்வதேச தமிழீழ விடுதலைக் கழகம்

நியூயோர்க்கில் இடம் பெற்ற முதலாவது உலகத் தமிழீழ மகாநாட்டில் தமிழீழ விடுதலைக்காக உலகளாவிய விடுதலைக் கழகம் ஒன்று அமைப்பதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இத்தீர்மானத்தை மகாநாட்டில் கலந்துகொண்ட பல பேராளர்களும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களும் பலத்த கரகோஷத்திற்கு மத்தியில்நிறைவேற்றினர்.

மேற்படி தீர்மானத்தை எதிர்க்கட்சி முதல்வர்அமிர்தலிங்கம் முன்மொழிய தமிழீழ விடுதலை அணி அமைப்புச் செயலாளர் ஈழவேந்தன் வழிமொழிந்தார்.

# 30 ஆண்டுப் பாராளுமன்ற பாதையை விட்டு புதிய நெறிக்கு வாருங்கள்

## —கூட்டணித் தலைவர்களுக்கு டாக்டர் 'தருமர்' அழைப்பு

"தமிழர் ஒற்றுமை இன்றியமையாததுதான். ஆனால், விடுதலையை நோக்கிய பயணத்துக்காகவே தமிழ் மக்கள் ஒருகொடியின்கீழ்ஒன்றுபடவேண்டும்-இதனைத்தவிர வேறுஎந்தஅடிப்படையிலும் த. வி. கூட்டணியினருடன் ஒற்றுமை சாத்தியமாகாது. கடந்த முப்பது ஆண்டுகள் நடத்துவந்தபாராளுமன்றப் பாதையைநிராகரித்துவிட்டு கூட்டணித் தலைவர்கள் ஒரு புதிய பாதையிற் செல்லத் தயாராக வேண்டும்"— இவ்வாறுதமிழீழவிடுதலைஅணித் தலைவரும் தந்தை செல்வாவுடன் கடந்தமுப்பது ஆண்டுகள் விடுதலைப் பாதையில் இணைந்து நடந்து வந்தவருமான டாக்டர் தருமலிங்கம் உலகத் தமிழீழ மாநாடு தொடர்பாக 'சற்றடே றிவியூ' ஏட்டிற்கு அளித்த பேட்டியொன்றிற் கூறியுள்ளார்.

"ஈழத்தமிழர் தமது சுய நிர்ணய உரிமையைப் பிரயோகித்து இழந்த தமிழீழ நாட்டை மீள்வித்துப் புனரமைக்கும் ஆணையைக் கூட்டணியினர்க்கு வழங்கியுள்ளனர். ஸ்ரீலங்கா அரசுடன் அல்லது அரசியற் கட்சிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளுக்கு இதுவே அடிப்படையாக அமைய வேண்டும்-இதிலிருந்துதான் பேச்சுவார்த்தை முன்னேற வேண்டுமேயன்றிப் பின்னேக்கிச் செல்ல முடியாது எனக் கூட்டணி வலியுறுத்த வேண்டும்தமிழீழமொன்றே கூட்டணி மக்களிடம் கேட்டுப் பெற்ற ஆணை; ஆனையுண்ட விளாங்கனி போன்ற மாவட்ட அபிவிருத்திச் சபைகளை மக்கள் என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" என்று டாக்டர் தருமர் தமது பேட்டியில் கூறியுள்ளார்.

## தமிழர் கூட்டணியார் கோபப்படுவது சரியா?

முனைவர்: சாலை இளந்திரையன்

—பக்கம்-2

தமிழ் ஈழத்தேசத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணியார் கோபப்படுவது சரியா?

# தந்தை இட்ட ஆணையை மூத்தவர் மீறலாமா?

## மூத்தவர்கள் ஓய்வெடுக்கவேண்டும்; கீழே முளைத்த இளங்கன்றுகளே திமிர வேண்டும்!

தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் வரலாற்றில்ஒருமுக்கியமான திருப்பம்இப்போது ஏற்பட்டு இருக்கிறது. இது வரை ஈழத்தமிழரின் ஏகப் பிரதிநிதியாக விளங்கிவந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செல்வாக்குதமிழ் மக்களிடையே சரியத் தொடங்கியுள்ளது. தங்கள் பெரிய இலட்சியமாகிய தமிழ்ஈழ விடுதலையை வென்றெடுத்துத் தருவார்கள் என்ற நம்பிக்கையிலே, தமிழர் விடுதலைக் கூட்டணி மீது அளவு கடந்த அன்பும் பாசமும் வைத்திருந்ததமிழ் மக்கள், அந்த நம்பிக்கைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பாத்திரமாக இல்லை என்று சந்தேகப்படத் தொடங்கி விட்டார்கள். இதனாலேயே கூட்டணியினரின் நடவடிக்கைகளைக் குறித்து வெளிப்படையான விமர்சனம் எழுந்துள்ளது. கண்டனமும் கிளம்புகிறது.

### இது கதையா?

விடுதலை இயக்கங்களின் வரலாறுகளை நன்கு தெரிந்தவர்களாக இருந்தால்—பழையவிடுதலை இயக்கங்களில் இருந்துபாடம் கற்றுக் கொள்ளும் தெளிவு தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு இருக்குமானல்— அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்- தங்களுக்குத் தளர்ச்சி ஏற்பட்ட நேரத்தில் தங்களின் சரியான வாரிசுகளான இளைய தலைமுறையினர் தங்கள் நரம்புகளில் முறுக்கேற்றிச் சரியான தடத்தில் தங்களை நடக்கச்செய்கிறார்கள் என்று உவகை கொள்ளுவார்கள். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இந்த உயிர் நெறியை உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. அதனாலேயே—தாங்களே வளர்த்து விட்ட தங்கள் இளந்தலைமுறையினர் மீது சத்துப்பூத்தென்று பாய்கிறார்கள் அவர்களைக் கருவறுக்கும் பணிகளிலே ஈடுபடுகிறார்கள் என்று கேள்வி...

வறண்ட பகுதியிலே வாழும்ஒரு உழவுத்தொழில் குடும்பத்தார், கல்லும் கரடுமாக இருந்த தங்கள் நிலத்தை வெட்டித் திருத்தி, அதை நல்ல பயிர்நிலமாக்கி விடுவது என்று முடிவு செய்தார்கள். அதன்படியே பணி தொடங்கியது. தந்தையும் அவருடைய மூத்த குமாரர்களும் தீவிரமாக உழைத்து வந்தார்கள். இளம்செல்வங்களும், கூடமாட ஓடி ஆடித் துணை செய்தார்கள்.

பணிமுற்றுப்பெறுமுன்பே தந்தை காலமானார். மக்கள் அனைவரையும் தமது மரணப்படுக்கை அருகே அழைத்து, 'இந்த நிலத்தை நல்ல நிலமாக்கிவிட்டேமறு வேலை பாருங்கள்' என்று, தமது லட்சியத்தை நினைவு படுத்திவிட்டே அவர் கண்ணை மூடினார்.

மூத்த மைந்தர்கள்தங்கள் தந்தையோடு முழுமையாக வேலை செய்தவர்களே; கற்களை அகற்றுவதிலும் காடுகளைப் பெயர்ப்பதிலும் முழுக்கமுழுக்கத் தங்கள் தந்தைக்குத் துணை நின்றவர்களே. ஆனாலும்தோண்டத்தோண்டக் கல்லாக வருகிறதே என்ற திகைப்பு இப்போது அவர்களை தளரச் செய்கிறது. வெட்டி எடுக்கப் புதிய கரடுகள் உண்டாகின்றனவே என்ற மலைப்பு அவர்களை ஓய்ந்து உட்காரச் செய்கிறது. முக்கியமான காரணம் அவர்களைத் தட்டிக்கொடுத்து வேலைவாங்க இப்போது அவர்களின் தந்தை இல்லை: அவர் இல்லாததாலே—தலைவன் இல்லாத படை வெட்டுமா? என்ற பழமொழிக்கு இலக்காகித் தங்கள் கடமையிலே அவர்கள்சோர்வுபட்டு நிற்கிறார்கள்.

மரணப்படுக்கையில் தங்கள் தந்தை விடுத்தகட்டளையினால் புதிய எழுச்சிகொண்டுள்ள இளைய தம்பிகளுக்கு அண்ணன்மாரின் அயர்வு பிடிக்கவில்லை எடுத்த பணியில், இடையிலே சோர்ந்து நிற்பதுசரி இல்லையே என்று அவர்கள் துடிக்கிறார்கள்.

**முனைவர் சாலை இளந்திரையன்**

'வினை பகைஎன்று இரண்டின் எச்சம் நினையுங்கால் தீ எச்சம் போலத் தெறும்''

என்பது அநுபவ உண்மை ஆயிற்றே என்று அவர்கள் பதைக்கிறார்கள்- ஆமாம், நம்மை உயர்த்தும் நல்ல செயலையோ பகைவனை ஒழிக்கும் பாரிய கடமையையோ தொடங்கிவிட்டால்; அதை இடையிலேநிறுத்தக்கூடாது நிறுத்தினால்— பாதி அணைத்தும் அணைக்காமலும் விடப்பட்ட நெருப்புப்போலநமது விடுபாடே நம்மை அழித்து போடும், இதை நினைத்துப் இளையவர்கள் பதைக்கிறார்கள். ஏற்றவழி ஒன்றுகண்டு. நமது இலட்சியத்தை நிறைவேற்றித் திரவேண்டும் என்று நிமிர்கிறார்கள்.

இதைப்பார்க்கின்ற அண்ணன்மார் என்ன செய்ய வேண்டும்? ஒன்று தங்கள் சோர்வை அள்ளி எறிந்து விட்டுத் தம்பியரோடு வீர நடை எடுக்க வேண்டும். அல்லது தம்பிகளே வயதாலும் கடும் உழைப்பாலும் நாங்கள்களைத் துப்போனோம் நீங்கள் பணியை நிறைவேற்றுங்கள், என்று வாழ்த்தி விட்டுத்—தங்கள் வீட்டுத் திண்ணையிலேமுடங்க வேண்டும்.

செய்கிறார்களா தமிழர் விடுதலைக் கூட்டணியினர்? செய்யவில்லை,' அதுமட்டுமா, சொக்காரன் வீடுதீப்பிடித்து எரிகையில் அவன் காலைக் கட்டிக்கொண்டு அழுத கடையனைப்போல முன்னே செல்லும் தங்கள் இளையவர்கள் மீது பழிசுமத்தி, இவர்களால் ஈழத்தமிழ் இனமே அழிந்து போகும் என்று ஓலம் பரப்புகிறார்கள்

### அழகோ இது?

கிழடு தட்டிப் போன தமிழர் விடுதலைக் கூட்டணியாரை இப்படி [illegible] செய்ய வேண்டிய[illegible] யம் ஏன் ஏற்பட்டுள்ளது என்றால்—இவர்கள் தான் தங்கள் மேடை மாலைகளுக்காகத் தனிநாடு கோரிக்கையை இளைஞர்கள் நெஞ்சிலே ஆழமாக விதைத்தவர்கள். இன்னல்களுக்கும் தொல்லைகளுக்கும்ஆடபடடுதமிழ்ஈழமக்கள் செய்வது அறியாது சுமைந்துக்கொண்டு இருந்த போது 'பறிக்கப்பட்ட நமது தமிழ் ஆட்சியை மீட்டு நிலைநாட்டுவது ஒன்றே வழி' என்று கண்டு சொன்ன தந்தையிடம் 'கைகொடுப்போம்நாங்கள்' என்று உறுதி சொன்னவர்களும் இவர்களே,

இத்தனை ஆர்ப்பாட்டமான உறுதி மொழிகளோடு தமிழ் மக்களை அணிசேர்த்த இவர்கள்—'உடல், பொருள். ஆவி அனைத்தையும் இழந்தாவது சுதந்திரத் தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம்! என்றுமுழக்கமிட்ட இவர்கள்...ஒன்று படையை சரியாக நடத்தி வருகின்ற சாக்காட்டை வரவேற்க வேண்டும். இல்லையேல் 'எம்மால் இயலாதப்பா' என்று ஒப்புதல் வாக்குமூலம் தந்து விட்டுக்களத்திலிருந்து புறம்காட்டி ஓடவேண்டும்- இரண்டும் செய்யாமல் போர்க்களத்தையே குழப்பக்களமாக்குவது எந்த வீரனுக்கும் அழகாகாது.

விடுதலை இயக்கம் என்பது யாரோ ஒருவரின் குடும்பச் சொத்தோ ஒருசிலரின்கூட்டு உடமையோ ஆகாது. அது ஓர் இனமக்களின் பொதுச் சொத்து. அதைப் பேணிப் பாதுகாக்க முடியாதவர்கள் தாங்களாக ஒதுங்கிவிடுவது அல்லது மக்களால் ஒதுக்கப் படுவது இத்தகைய இயக்கங்களில் சாதாரணமாகவே நடக்கும் நிகழ்ச்சியே. இந்த உண்மையை விளங்கிக் கொள்ளாமல்— 'நான் சொன்னபடிதான் இயக்கம் நடக்க வேண்டும்!' என்று தொண்டையை நெரிப்பதோ. 'நாங்கள் சிலபேர் சொன்ன தடம்தான் சரியான தடம்' என்று சிலபேர் முடக்குவாதம் பேசுவதோ இயக்கத்தில் பங்குகொண்டு இருந்தவர்களுக்கு அழகாகாது, இது 'பேர் சொல்லுவான் என்று பிள்ளையைப் பெற்றுவளர்த்தால், அவன் எங்கேயோ திருடி விட்டுக் காவல் [பொலீஸ்] நிலையத்தில் போய்த் தகப்பன் பெயரைச்சொன்ன கதையாகுமே தவிர—நல்ல மக்களின் செயலாகாது.

### வேறுபாடு உணர்க

தமிழீழ விடுதலை இயக்கம் தங்களை மீறிய வேகம் கொண்டுவிட்டதைக் கண்டு விடுதலைக் கூட்டணியார்



பதைக்கிறார்கள். பார்ப்பவர் மீதெல்லாம் சீறி விழுகிறார்கள்- 'எப்படி இயக்கம் நடத்துவது என்று எங்களுக்காகற்றுத்தருகிறீர்கள்? என்று கொதிக்கிறார்கள்.

அவர்கள் ஓர் எளிய உண்மையைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இவர்கள்; விடுதலை இயக்கத்துக்குள் அடியெடுத்து வைத்தகாலத்தில், தமிழர்கள் ஏதோ சில உரிமைகளை இழந்திருந்தார்கள் இன்னும்இவைஇவைகளை இழக்க நேருமோ?' என்ற மங்கலான அச்சமும் தமிழ் மக்களிடையே பரவியிருந்தது, இந்த இரண்டு உணர்வுகளுக்கும் ஏற்றவிதமான போராளிகளாக ''நாடாளுமன்றத்தில் முழக்கமிட்டு இவைகளை மீட்டிடலாம்'' என்றவாய் ஆயுத வீரர்களாகவே தயாரானவர்கள் இன்றையத் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையாளர்கள்.

அவர்கள் கொடியேற்றிய தற்குப் பிறகு நடந்துள்ள நிகழ்ச்சிகள் மிகமிகக் கொடுமையானவை, இணைந்து வாழச் சலுகைகோரிய தளத்திலிருந்து பிரிந்து வாழவேண்டிய கட்டாயத்துக்குத் தமிழர்களைத் தள்ளியவை இந்த நிகழ்ச்சிகள். இந்தக்காலகட்டத்திலே இயக்கத்துக்கு ஈர்க்கப்பட்ட இளையவர்கள் வெறும் வார்த்தைகளை நம்பிப்போராட முடியாது எதிரியைப்பணியவைக்கும் உண்மையான போராட்டத்தையே அவர்கள் விரும்புவார்கள்; விரும்புகிறார்கள்,

தமிழ்ஈழ உரிமைப்போராட்டத்திலே உள்ள இந்த இடைவெளியைஉணராததாலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியார் 'எங்களுக்கா போராட்டம் கற்பிக்க வந்தீர்கள்?' என்று கொக்கரிக்கிறார்கள், இது மிக மிகத் தவறு; இயக்கவரலாற்றையும் அதனில் ஏற்பட்டு நிற்கும் பெரிய வளர்ச்சிக் கட்டத்தையும் விளங்கிக்கொள்ளாததால் அவர்கள் செய்து வரும் தவறு,

### சிந்தியுங்கள்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் குருதியும் சதையுமாக உலகெங்கும் பரந்து கிடக்கும்பல்லாயிரம் எளிய தொண்டர்களிலே ஒருவன் என்ற முறையில்—என் தமையன் முறையினரான தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையினரைக் கனிவோடு வேண்டுகிறேன், கோபம் நமது கண்ணைமறைக்கிறது. கருத்தையும் மறைக்கிறது. எனவே, அதைச் சற்றே நிறுத்திக்கொண்டு, நமது தமிழீழ விடுதலை இயக்கத்தைத் தலைமேல் ஏற்றிவைத்துக்கொண்டு எண்ணிப்பாருங்கள்- நாம் கோபப்படுவது சரியா என்று எண்ணிப் பாருங்கள்- 'ஓர் இயக்கத்தின்வளர்ச்சி வரலாற்றிலே தன்மதிப்பீடு என்னும் சுயவிமர்சனம் அந்த இயக்கத்தின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் தேவை' என்றதெளிவோடு எண்ணிப்பாருங்கள்.

# லெபனன்மீது இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு ஈழமாணவர் பொதுமன்றம் கண்டனம்

## பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு

உலகில் உள்ள விடுதலை இயக்கங்களினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் நம்பிக்கைநட்சத்திரமாகத்திகழும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அழித்தொழித்து விட்டு தாங்கள் நிம்மதியாக இருக்கலாம் என்று இஸ்ரவேலிய சியோனிச அரசும் அமெரிக்கஏகாதிபத்தியமும் கனவு காணுகின்றன.

ஜேர்மனியின் நாசிச அரசின் வாரிசாக மனித நாகரீகத்திற்கே ஒரு அவமானச் சின்னமாக இன்றைய இஸ்ர வேலிய சியோனிச அர[illegible] தங்களுடைய சொந்தத் தாயகமான பாலஸ்தீனத்திலிருந்து வெளியேற்றப்பட்டது மாத்திரமல்லாமல் அண்டை நாடுகளில் அகதிகளாய் சென்றடைந்தமக்களை அங்கேயும் சென்று அழித்தொழிக்கும் முயற்சிகளை இஸ்ரவேலிய சியோனிச அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் செய்து வருகின்றது,

இஸ்ரவேலின் ஈனத்தனமான வெட்கக்கேடான இச் செய்கையை ஈழ மாணவர் பொதுமன்றம்வன்மையாய் கண்டிப்பதோடு, கடந்துமுப்பத்தைந்துவருடங்களாகபல வேறு தியாகங்களுக்குமத்தியில் உறுதியுடன் போராடி வரும் பாலஸ்தீனர்களுக்கு தனது உறுதியான ஆதரவையும் தெரிவித்துக்கொள்கிறது.

அதே வேளை ஈழ விடுதலைக்காகப் போராடும்ஈழமக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் கையாளான இஸ்ரவேலிய அரசுக்கும்எதிரான தமதுஎதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவதோடு பாலஸ்தீன மக்களின் வீரம் மிகு போராட்டத்திற்குத் தமது உறுதியான ஆதரவை நல்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு அபிவிருத்திச் சபை கலைக்கப்படும்?

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை ஸ்ரீலங்கா அரசின் விசுவாசமுள்ள முகவர் நிலையமாக இயங்கிவரும் அதேவேளையில் மட்டக்களப்பு அபிவிருத்திச் சபை கூட்டணியினரும் அரசுசார்பான உறுப்பினர்களும் முட்டிமோதிக்கொள்ளும் களமாக அமைந்து வருகிறது. திட்டல், தூற்றல், வெளிநடப்பு,ஒத்திவைப்பு என்று மட்டுநகர் அபிவிருத்திச் சபை போர்க்கோலத்துடன் செயற்பட்டுவந்தது. இன்று அந்தநிலை உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற குழப்பங்கள் காலமும் இடமும் அறிந்து சிறப்பாகத் திட்டமிடப்பட்டே மேற்கொள்ளப்பட்டதாகத்தெரிகிறது. கூட்டணியின் உயர் தலைவர்கள் இல்லாத காலத்தில் குழப்பத்தை ஏற்படுத்தினுல் அபிவிருத்திச் சபையைக் கலைத்துவிட அதிக வாய்ப்பு உண்டு என்பதாலேயே நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டுள்ளன. இத்தகைய சூழலில் கூட்டணித் தலைவர்கள் இருந்தால் அவர்கள் உயர்மட்டப் பேச்சு மூலம் நிலைமையைச் சமாளித்து விடுவார்கள். இன்று அரசிடம் நெருங்கிப் பழகும் கூட்டணித் தலைவர்கள் எவரும் நாட்டில் இல்லை.

குழப்பம் ஏற்பட்ட உடனேயே சொல்லி வைத்தது போல மட்டுநகர் பட்டிருப்பு கல்குடா ஆகியமூன்று தொகுதிகளிலுமுள்ள ஐ.தே.க. கிளைகள் பிரதமரிடம் கலைப்புக் கோரிக்கையை விடுத்துள்ளன.

அபிவிருத்திச்சபை விதிகளின்படி அவை அபிவிருத்திக்கு உதவவில்லை என்ற காரணத்தால் அவற்றை அரசு உடனே கலைத்துவிட முடியும். எனவே ஐக்கிய தேசியக்கட்சி கிளைகளின் வேண்டுகோளை ஏற்று அரசு விரைவில் உரிய நடைமுறைகளின்படி துரிதமாகச் செயற்பட்டு அபிவிருத்திச் சபையைக்கூட்டணித் தலைவர்கள் உலகச் சுற்றுலா முடிந்து நாடுதிரும்புமுன் கலைத்துவிடலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

மட்டக்களப்பு அபிவிருத்திச்சபை அரசியல் நோக்கங்களுக்காகக் கலைக்கப்பட்டால் அதனைத் தொடர்ந்து அம்பாறை, திருமலை, வவுனியா, மன்னார். முல்லைத்திவு. யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபைகள் கலைப்புக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் தம்மைப்பதவிகளிலிருந்து விலக்கிக்கொள்ள வேண்டுமென்று ஈழத் தமிழர்கள் கிளர்ச்சி செய்வார்கள் என்று கூறப்படுகிறது. எந்தக்கட்டத்திலும் சபை உறுப்பினர்கள் பதவியைப்பயன்படுத்தி விடுதலைப்போராட்டத்தை ஆரம்பிக்கலாம் என்ற அபிவிருத்திச்சபைத் தேர்தல் வாக்குறுதியை அவர்கள் ஆதாரம் காட்டுகிறுர்கள்.

மட்டுநகர் அபிவிருத்திச் சபையில் ஆளுங் கட்சியினர் நால்வரும் கூட்டணியினர் மூவரும் உள்ளனர். அறிவிக்கப்பட்டுள்ளபடி நம்பிக்கையில்லாத்தீர்மானம்கொண்டு வரப்பட்டால் அது நிறைவேறுவது உறுதி. எனவே, கூட்டணித் தலைமையிலுள்ள உறுப்பினர்கள் பதவி விலக நேரிடும்.

கூட்டணியின் சிரேட்ட தலைவர் திரு-வி. தருமலிங்கம் பா-உ- அவர்களும் திரு: வெ- யோகேஸ்வரன் அவர்களும் மட்டுநகரில் எழுந்துள்ள நிலைமைபற்றி ஆராய்ந்து வருவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. இவர்கள் அபிவிருத்திச்சபைத் தலைவருடனும் பட்டிருப்புப்பா-உ- உடனும் தொடர்பு கொண்டுவருகிறுர்களாம்.

## தமிழகத்தில் சிறைப்பட்ட ஈழப்போராளிகளுக்கு ஆதரவுக் கூட்டம்

இலண்டனிலுள்ள தமிழர் உரிமைக்குழு யூன் 20 ஆம் தேதி திருமதி மேரி டைம்ஸ் தலைமையில் நடத்திய கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

1- தமிழகத்தில் சிறைப்படுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் போராளிகளுக்குத் தேவைப்படும் சட்டத்துறை சார்ந்த உதவிகளை வழங்குதல்-

2- தமிழ்ஈழ விடுதலைப் போராளிகள் தமக்குள்ளே வீணுகப் போரிட்டு அழியாமல் விடுதலைப் போராட்டத்தின் பேரில் ஒன்றுபடவேண்டும் என்று கோருதல்,

3, தமிழ்ஈழ விடுதலைப் போரில் ஈடுபட்டுஉயிரிழந்த வீரத் தியாகிகளுக்குஅஞ்சலி செலுத்துதல்,

இந்த நிறுவனம் பா.உ. டபிட் உவிக்லி (Dafydd Wigley M.P)யைத்தலைவராகவும் பா- உக்களான டேவிட் அல்ரன் (David Alton M.P) செய்லா றைற் (Sheila wright M.P.) ஆகியோரைத் துணைத் தலைவர்களாகவும் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குழுவினர் மார்ச் 20 ஆம் திகதி 'இனக்கொலைக்கு எதிரான அனைத்துலக நடவடிக்கைகள் என்ற தலைப்பிலான மாநாட்டை நடாத்தினர்- அப்போது சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்பட்ட மனித உரிமைக்குழுவின் ஆட்சிப் பணியாளர் பென் விற்றேக்கரும் உரையாற்றினுர்.

"இலங்கைக்கு வெளியேயுள்ள தலைமறைவுத் தமிழர்களே, சிறப்பாக இலண்டன் தமிழர்களே, கடந்த பத்து ஆண்டுகளாக இலங்கையில் மாபெரும் இனக் கொலை நடப்பதாகக் காட்ட முயல்கிறுர்கள். ஆனுல் இலங்கையில்வாழும்தமிழர்களுடைய கருத்து முற்றிலும் இவர்களுடைய கருத்திலிருந்து மாறுபட்டது. அவர்கள் அரசுடன் சமரசஉறவோடுவாழ்கிறுர்கள்."

இத்தகைய தவருன முடிவுக்கு வெளிநாட்டவர்கள் வருவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி உறவே முக்கிய காரணமாக உள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செங்கதிர் (லண்டன்) ஏடு அரசுக்குச் சார்பாகவும் தமிழ்ஈழவிடுதலைப்போராட்டத்துக்கு எதிராகவும்வெளியிட்டுவரும் செய்திகளும் இதற்குக் காரணமாக உள்ளன- இலங்கை நடத்திய பொருட்காட்சியில் தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் நடத்திய போது கூட்டணியின் இலண்டன் கிளையினர் வாக்குரிமைப்பொன்விழாப் பொருட்காட்சிக்கு மௌன ஆதரவு வழங்கினுர்கள்என்பதுகுறிப்பிடத்தக்கது.

## இந்திய விடுதலைப் போர் நேருஜியின் சிறைவாசம்

1919இல் ஜவஹர்லால் நேரு தீவிர அரசியலில் ஈடுபட்டார். காந்திஜியின் பிரதம தளபதியாயிருந்த நேருஜியின் இடைவிடாத போராட்டங்களால் முப்பது ஆண்டுகளில் காந்திஜீயின் திட்டங்கள் இந்திய 'விடுதலைக்கு வழிவகுத்தன.



முப்பது வருடங்கள் ஈழத் தமிழரின் விடுதலைப் போரில் தூணுக்குஉதவாத முருக்கு மரங்களாகவளர்ந்தவர்கள் நேருவின் முன்னுதாரணத்தைப் பின்பற்றுவது ஈழம் விடுதலை காண உதவும்.

தமது 30 வருட அரசியல் வாழ்க்கையில் மொத்தமாக உள்ள 10,950 நாட்களில் 3262 நாட்களைச் சிறையில் தவம் செய்ய நேருஜிஒதுக்கினுர்- அதாவது 10 ஆண்டுகள் அவர் சிறையில் வாடிச் சிந்தனையை வளர்த்துக் கொண்டார்.

விடுதலைப்போரைஅட்டமி நவமி, இருத்தை— அமாவாசை, இராகுகாலம் எனப் பின் போடும் எமது தளபதிகள் நேருஜியின் முன்னுதாரணத்தைப் பின்பற்ற இன்றே உறுதி பூண்டால் தமிழீழம் மீட்சி பெறுவது உறுதி.

நேருவின் சிறை வாழ்வு விபரம்இதோ!-

முதல்முறை—87 நாட்கள்
இரண்டாம்முறை—265 நாட்கள்
மூன்ரும்முறை—12நாட்கள்
நான்காம்முறை—180 நாட்கள்
ஐந்தாம் முறை—99 நாட்கள்
ஆரும்முறை—612 நாட்கள்
ஏழாம்முறை—[illegible] நாட்கள்
எட்டாம்முறை398 நாட்கள்
ஒன்பதாம்முறை—1040 நாட்கள்

பசித்தவன்பழங்கணக்குப் பார்ப்பது போல 20 ஆண்டுகளுக்குமுன் சிறைக்குச் சென்ற கதைகளைக்கூறி மக்கள் முன் கண்ணீர் விடுவதை நிறுத்தி இளந்தலைவர்களைப்போலக் கொடுமைகளும் சித்திரவதைகளும் நிறைந்த சிறை வாழ்வைப் பெறப் பாராளுமன்றத்தலைவர்களும்முன்வருவார்களா? ஆயிரமாயிரம் தொண்டர்களுக்கும் சிறைக்குச் செல்ல அழைப்புவிடுவார்களா!

மாவட்ட சபையால் தமிழீழம் மலராது விடுதலைப் போராட்டம் பாராளுமன்றத் தலைவர்களையும் அழைக்கிறது.

'1982இல் தமிழீழம்' உறுதியாகிவிட்டது. 30 ஆண்டுகளாகத் தியாகம் செய்த ஓரிருவர் இன்றும் கூட்டணிப் பா.உ.க்களாக இருக்கிறுர்கள். அவர்கள் 'தமிழீழம் 1982'க்குத் தலைமை தாங்கி வழி நடத்துவார்களா?

## அமைச்சர் தேவாமீது அரசு நடவடிக்கை

"எதிர்க்கட்சி முதல்வர் அமிர்தலிங்கம் நியூயோர்க் மகாநாட்டில் தமிழீழத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பதாகச் சனுதிபதிக்கு உறுதியளித்தார்" என்ற செய்தியை அண்மையில் அமைச்சர் தேவநாயகம் வெளியிட்டிருந்தாரல்லவா? இது அரசியல்வட்டாரங்களில் பெரியபரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

உயர்மட்டத் தலைவர்களின் உச்சிமாநாட்டிலே அந்தரங்கமாக அளிக்கப்பட்டவாக்குறுதியைப் பகிரங்கப்படுத்தியதால்அரசின் தலைமைப் பீடம் அமைச்சர் தேவா மீது சீற்றம் கொண்டுள்ளதாம்,

சனுதிபதியின் நேர்மையைமாசுபடுத்தும் வகையில் நடந்துகொண்ட பாணந்துறைப் பா.உ விலக்கப்பட்டதுபோல் அமைச்சர் ஒருவர் தாமாகவே பதவியை விட்டுவிலகி நாட்டைவிட்டுப் பறந்தோடச் செய்யப்பட்டதுபோல அமைச்சர் தேவாவும் பதவியிலிருந்து விலகிச் செல்ல நடவடிக்கை எடுக்க அரசின் உயர்மட்டம் ஆலோசித்து வருவதாகக் கொழும்பிலிருந்து கிடைத்தசெய்திகள் கூறுகின்றன-

## ஈழப் போராளிகள் வன்முறை ஈடுபாடு ஏன்?

—கலைஞர் கருணுநிதி விளக்கம்

தாய் தனக்கு நேராகக் கற்பழிக்கப்படுகிறுள்.மனைவி தனக்குமுன்னுல் கற்பழிக்கப்படுகிறுள். தமிழன் முதுகில் குத்தப்படுகிறுன். கட்டி வைத்து அடிக்கப்படுகிறுன்-சுட்டு வீழ்த்தப்படுகிறுன்.

இதற்குப் பிறகும் வேறு வழியில்லை என்றுகருதிஈழப் போராளிகள் விடுதலைப் புலிகளாக மாறினுர்கள். அவர்களை உண்மையான தமிழர்கள் என்று பாராட்டுவது தான் இந்தத் தமிழ் நாட்டிலே இருக்கிற தமிழர்கள் கடமையாகும்,

இலங்கைத் தமிழர் தமிழகத்தில் வேட்டையாடப்படக் கூடாது. இலங்கையைச் சேர்ந்த விடுதலைப்புலிகள் இருவருக்கிடையே தகராறு ஏற்பட்டு வழக்குப் போடப்பட்டிருக்கிறது; அந்த இருவர் குறித்த வழக்கோடு தமிழக அரசு தனது கடமையை நிறுத்த வேண்டும்.

அவர்கள் மீது பயங்கரமான சட்டப் பிரிவுகள் திணிக்கப்படக் கூடாது.

—கலைஞர் கருணுநிதி
சென்னை சீரணி அரங்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ மாநாட்டுக்குத் தமிழகத்தின் பாராட்டு

## நெடுமிடல் கடிதம்

டாக்டர் வி.வி. பஞ்சாட்சரம்
உலகத் தமிழீழ மாநாடு,
89, டென்னிசன் டிரைவ்,
நனுவட்,
நியூயார்க்-10954.

அன்பு கெழுமிய ஐயா,
வணக்கம்.

### வெளிநாட்டுத் தமிழர் அணியம்

உலகத் தமிழீழ மாநாடு கூடுகின்ற அருமையான நேரத்தில் தங்களுக்கு இந்த மடல் எழுதுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழீழத் தத்துவம் பல முகங்களிலும் வளர்ந்து இன்று பேருரு அடைந்துள்ளது. தமிழீழத்துக்கு வெளியே ஓர் அயல்நாட்டில் 'உலகத் தமிழீழ மாநாடு' கூடுகிறது. என்ன விலைகொடுத்தேனும் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க விடுதலைப்போராளிகள் அணியமாக இருக்கின்றனர் என்பதை உலகறிய எண்பிக்கும் எடுத்துக்காட்டுகளில் இதுவும் ஒன்று. அதற்காக மகாநாட்டு அமைப்பாளர்களைப் பாராட்டுகிறோம்.

### அமிர், இராசு தொண்டா துரோகம்

கடந்த ஆண்டின் முடிவிலேயே தமிழீழ வெற்றி சித்தியாகிஇருக்க வேண்டும் சிங்களவர்களின் சூழ்ச்சிக்கு வயப்பட்ட தொண்டைமான் இராசதுரை, அமிர்தலிங்கம், அணியினர் தமிழீழக் கோரிக்கைக்கு விடுமுறை அளித்து விட்டதால், கைக்குக்கிடைக்க விருந்த வெற்றிக்கனி தள்ளிப்போய் விட்டது. இப்படிச் சிலர் உள்ளம் குன்றி, ஊக்கம் குன்றி வட்டுக்கோட்டை முடிவிலிருந்து வழுவிச் சென்றாலும், உள்ளத்தில் உறுதி வாய்ந்த தமிழீழ விடுதலைப் போராளிகள் உலக வரலாற்றிலேயே முன்னெப்பொழுதும் கண்டிராத பல புதுமையான வழிகளில் ஈழத்திலும் ஈழத்திற்கு வெளியேயும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். தங்கள் ,போராட்டத்திற்கு உலக மக்களின் ஆதரவைத் திரட்டுவதில் மிகுந்த வெற்றியும் பெற்றிருக்கின்றனர். அவர்கள் அனைவரையும் ஆழ்ந்து உவந்து பாராட்டுகிறோம்.

சிங்கள அரசின் அடுக்கடுக்கான சூழ்ச்சிகளினால் விடுதலைப் போராளிகளின் திட்டங்களை இம்மியும் குலைக்க இயலவில்லை என்பதுவெளிப்படையாகத் தெரியும் ஓர் உண்மை, அவர்கள் தம் திட்டங்களைத் தேதி தவறாமல் நிறைவேற்றுவதைத் தடுக்க முடிந்ததா?

### படிமுறை வளர்ச்சி

தமிழீழ விடுதலைப் போராட்டம் படிமுறையான வளர்ச்சியைப்பெற்று வருகிறது. பின்னிழுக்கம் அடையாமல் நாளுக்கு நாள் முன்னேற்றமே அடைந்து வருகிறது. வளர்ச்சிக்குத் தகுந்த உலகச் செல்வாக்கையும் அது ஈட்டியுள்ளது. சிங்களப்படைகளிடம் சிக்கி எப்பொழுது 'கொல்லப்பட்டார்கள். எப்படிக் கொல்லப்பட்டார்கள் என்று தெரியாமல் வீசி எறியப்பட்டிருக்கக் கூடிய விடுதலைப்புலிகளின் உயிர்கள் பாதுகாப்பதற்கு உரியனவாக இந்திய அரசு கருதுவதற்கு அடிப்படை இந்தச் செல்வாக்கே அல்லவா?

சிறீலங்காவின் ஆக்கிரமிப்புப்படைகள் தமிழீழத்தைவிட்டு விரட்டப்படுவதையும்தமிழீழ மக்கள்புதிய அரசு அமைத்துத் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்வதையும் தடுத்து நிறுத்தும் வல்லமை சிங்கள ஆட்சியாளர்களுக்கு இல்லை- பதவி நாற்காலிகளிலும் ஆட்சி அதிகாரங்களிலும் அவாக்கொண்ட சிலரை அவர்கள் தம்பால் ஈர்த்துக் கொள்ள முடியுமே அன்றி,வீர சுதந்திரம் வேண்டி நிற்போரின் எண்ணத்தின் உறுதியை வீழ்த்த முடியுமோ?

உள்நாட்டில் புலிப்படைகளிடமும்விடுதலைப்போராளிகளிடமும் தோற்றுவருவது போலவேஅயல்நாடுகளிலும் தோற்றுவருகிறது சிங்கள அரசு, ஈழத் தமிழர்கள் ஆதரவு திரட்டிய நாடுகளில் எதிர்ப்பிரசாரம் செய்ய முயன்று தோல்வியே அடைந்தது. சென்னையில் சிறைப்பட்ட விடுதலைப் புலிகளை இந்திய அரசு தன்னிடம் ஒப்படைத்து விடும் என்று பேடித்தனமாக ஆசைப்பட்டு ஏமாறியது ஜெயவர்த்தனே அரசு.

### மக்கள்போராட்டம்

சிங்கள சிறீலங்காவின் ஆக்கிரமிப்புப்படைகளைத் தமிழீழ நாட்டிலிருந்து வெளியேற்றுவது மக்கள்சக்தியைக்கொண்டுசெய்யவேண்டிய செயல். சிறீலங்காவின் ஆட்சி அதிகாரத்தையும் படைவலிமையையும்எதிர்க்கும் துணிவை தமிழீழ மக்கள் அனைவரின் உள்ளத்திலும் புகுத்த வேண்டும். மக்கள் அனைவரும்பங்கு பெறக்கூடிய சட்ட மறுப்பு— அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களை—நாடு தழுவிய முறையில் (காந்தியார் நெறியில்) நடத்த வேண்டும்-

### தமிழகம் ஒன்றுபட்டது

தங்களுடைய உயிர், உடைமை, உறவு அத்தனையும் பணயம் வைத்து விடுதலைப் போராளிகள் போராடி வருகின்றனர். தமிழ்நாட்டில் எந்த ஒரு நேரத்திலாவது தி-மு-க-வும், அ-தி-மு-க-வும் ஒன்றுபட்டு ஒரே முடிவை எடுத்தன என்றால்அதுஇந்தி எதிர்ப்பிலும். ஈழத்தமிழர் விழுமம் துடைப்பதிலும் தாம்- அந்த ஒற்றுமை நிலை தான் விடுதலைப் புலிகளின் உயிர்களைக் காக்கும் அரணாக நிற்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. அதேபோலத் தமிழீழத்தில் உள்ள எல்லா அணிகளைச் சேர்ந்த மக்களும் ஒன்று சேர்ந்த விடுதலைப்போராளிகளுக்குத் தோள் கொடுக்க வேண்டும்- தமிழீழ விடுதலைக்குக் குரல்கொடுக்க வேண்டும் அரசாங்கஎதிர்ப்புப் போராட்டங்களில் வீட்டுக்கு ஒரு ஆள். கலந்து கொள்ள வேண்டும், அந்த நாள் விரைவில் வரவேண்டும்.

### சொத்தை அரசு

தமிழீழ மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நடத்தும் ஒரு சிறிய போராட்டத்திற்கேனும் தாக்குப் பிடிக்கும் வல்லமை சிங்கள அரசுக்கு இல்லை- சிங்கள அரசு ஓர் சொத்தை அரசு.

விடுதலைப் புலிகளின் உயிர்களைக் காப்பதில் உறுதியாக இருப்பதுபோலவே சிங்கள ஆக்கிரமிப்பு அரசாங்கத்தின் வன்முறைச் செயல்களிலிருந்து தமிழீழ மக்களின் உயிர்களைக் காப்பதிலும் தமிழகம் உறுதியாக உற்றுழி உதவும்-

### விடுதலை முன்னோடிகள்

வைகுந்தவாசன் அவர்களும் அமெரிக்க ஈழத் தமிழர் இயக்கமும் சுதந்திர தமிழீழ (1982) இயக்கமும் ஈடு இணையற்ற அருஞ் செயல்களைமுன்பே நிகழ்த்திக் காட்டியுள்ளனர். அவர்களும்பிற விடுதலைப் போராளிகளும் கூடும் இந்தஉயர்ந்தமாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகள் ஆங்கிலேயர் ஆட்சியை அடித்து விரட்டிய இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகளின் தீர்மானங்களைப்போல தமிழீழ மக்கள் அனைவரின் உயிரையும் உணர்வையும் இயக்கும் திண்மையுடையவனாக இருக்க வேண்டும் என்னும் அவாவினைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

"துன்பம் உறவரினும்
செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

இங்ஙனம்,
தங்கள் அன்பிற்குரிய,

**நெடுமிடல்**

இயக்குநர்,
தமிழர் நட்பு மன்றம்

---

## தமிழீழகரந்துறை

—1-ம் பக்கத் தொடர்

டன் தமிழர்ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் திரு. கிருஷ்ண வைகுந்தவாசன் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்ததாக ஈழநாட்டிற்குக் கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது. திரு. வைகுந்தவாசன் மேற்கொண்ட முயற்சிகளே 1982 தமிழீழப் பிரகடனத்திற்கு மூலமாக அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

"இம்முன்மொழிவு மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டால் வெளிநாடு ஒன்றில் தமிழீழ அரசு பிரகடனம் செய்யப்படும், எனது முன்மொழிவு மாநாட்டில் நிறைவேற்றப்படுமென நான் நம்புகிறேன்.

அம்முன்மொழிவைக் கைவிடுவதா இல்லையா என்பது கூட்டணிச் செயலதிபர்திரு. அமிர்தலிங்கத்தின் செல்வாக்கிலும் திறமையிலுமே தங்கியுள்ளது.

இலங்கையில் சனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்திவரும் திரு. அமிர் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம் தமிழ்மக்களுக்குசுயாட்சி ஏற்படுத்திக் கொடுக்க முயற்சித்து வருகிறார்.

இவ்வேளையில் ஈழத் தமிழர் தமது அடுத்த கட்டம் பற்றித் தீர்க்கமான நிலையிலிருந்து முடிவுசெய்யவேண்டும்.

1982 சனவரி 14 இல் தமிழ் ஈழப் பிரகடனத்தை இலண்டனில் மேற்கொள்ள முயன்றேன். எனினும் திரு. அமிர்தலிங்கத்தின் சில நடவடிக்கைகள் காரணமாக அத்திட்டத்தை மாற்றியமைத்து அமெரிக்காவில் ஐ. நா. சபை முன் பிரகடனம் செய்ய நேர்ந்தது" என வைகுந்தவாசன் கூறியதாக அச்செய்திக் குறிப்புக் கூறுகிறது.

## ஈழப்போராளிகளை இலங்கைக்கு அனுப்பாதீர்!

—தமிழகச்சட்டமாணவர்

"தமிழகத்தில் கைது செய்யப்பட்ட ஈழவிடுதலைப் புலிகளை எக்காரணம்கொண்டும் இலங்கை அரசிடம் ஒப்படைக்கக் கூடாது" இவ்வாறு வேண்டும் தீர்மானம் ஒன்றினைச் சென்னை, சட்டக் கல்லூரி மாணவர்கள் பொதுக் கூட்டத்தின் வாயிலாக நிறைவேற்றினர்.

## செங்கதிர் ஏட்டின் கயமைக்குக் கண்டனம்

### வீரகேசரியில் கடிதம்

தமிழ் இளைஞர்பேரவை விடுதலை அணியைச் சார்ந்த தியாகிஇறைகுமாரன்,உமைகுமாரன் பற்றிய தவறான செய்தி ஒன்றைக் கூட்டணியின் உத்தியோகபூர்வஏடான செங்கதிர் வெளியிட்டிருந்ததும் அதனைக் கண்டித்து இறைவனின் உறவினர் எழுதிய கடிதத்தைச் சுதந்திரன் வெளியிட்டதும் வாசகர்கள் அறிந்ததே.

செங்கதிரின் கயமைத்தனமான செய்தியைக்கண்டித்து அளவெட்டி மகாஜன சபை உறுப்பினர் ஒருவர் வீரகேசரி ஆசிரியருக்கு கடிதம்ஒன்றை எழுதியுள்ளார்.

## பொலிஸ் ஜீப் மீது துப்பாக்கிச் சூடு

நெல்லியடியில் கடந்த வெள்ளியன்று இனந்தெரியாத நபர்கள் பொலிஸ் வாகனமொன்றின்மீது துப்பாக்கியால் சுட்டார்கள். இத் தாக்குதலின்போது மூன்று பொலிசாரும் வாகனச் சாரதியும் கொல்லப்பட்டார்கள். மூவர் காயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் துணைத்தலைவர் திரு. வ.ந. நவரத்தினம் திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோர் இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

## வகுப்புக் கலவரங்கள் மூலம் தமிழரை அழிப்பதே அரசின் நோக்கம்

இலங்கையிலுள்ள தமிழர்களின் எண்ணிக்கை முப்பத்தைந்து லட்சம். சிங்களவரின் எண்ணிக்கை எண்பது லட்சம்.

அங்குள்ள தமிழர்களுக்குத் தொடர்ந்து கொடுமை இழைக்கப்படுகிறது. என்ன காரணம்? இலங்கையில் தமிழனை மெல்லமெல்லவிரட்டி விட்டால், தமிழினத்தை ஒழித்து விட்டால் சிங்களம் மட்டுமே ஆட்சி நடத்தும். தமிழ் மொழி எதற்காக? தமிழன் இருந்தால் தானே தமிழ் இருக்கும். தமிழன் எதற்காக?

தமிழரைப் பூண்டோடு அழிக்க முடியாவிட்டாலும் மெல்ல மெல்ல அவர்களதுஎண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்.

அதற்காகத் தொடர்ந்து ஒரு வன்முறை இயக்கம் ஆளுங்கட்சியின் ஆதரவோடு நடைபெறும் கொடுமை இலங்கையிலே தொடர்கிறது.

—பேராசிரியர் அன்பழகன் திமுக பொதுச் செயலாளர் அரியலூர் பொதுக் கூட்டத்தில்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டாரால், யாழ்ப்பாணம், மகாத்மாகாந்திவீதி,15-ஆம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1982 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7-ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org